செ.வெ.எண் : 06 நாள் : 06.05.2020

# அரியலூர் மாவட்டம்

# கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை குறித்து வட்டார அளவில் கட்டுப்பாட்டு அறைகள் அமைத்து, தீவிர கண்காணிப்பு பணிகள் நடைபெறவுள்ளது - மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகள் மற்றும் கண்காணிப்பு பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் மற்றும் குன்னம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஆர்.டி.இராமச்சந்திரன்** அவர்கள் முன்னிலையில் வகித்தனர்.

**இக்கூட்டத்தில், அரியலூர் மாவட்ட காவல் துறையினருக்கு கொரோனா வைரஸ் தொற்று பரவா வண்ணம் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குவதற்கு தனது சொந்த நிதியிலிருந்து ரூ.2 இலட்சமும், அரியலூர் நகராட்சி அம்மா உணவகத்தில் விலையில்லாமல் உணவு வழங்குவதற்கு ரூ.1 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.3 இலட்சத்திற்கான காசோலைகளை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் வழங்கி, தெரிவித்ததாவது.**

அரியலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று ஆரம்பத்தில் மிக குறைந்த அளவில் இருந்தது. வெளியுர்களிலிருந்து வருபவர்கள் மூலம் சற்று அதிகமாகியுள்ளது. மாவட்ட நிர்வாகம் மூலம் வெளியூர்களிலிருந்து வருபவர்களை தீவிரமாக கண்காணிக்கப்பட்டு மருதது்வ பரிசோதனை செய்யப்பட்டு முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

இனி வரும் காலங்களில் அவரவர் இல்லங்களில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட உள்ளனர். தீவிர மூச்சு திணறல் மற்றும் காய்ச்சல் போன்ற தீவிர நோய் அறிகுறி உள்ளவர்கள் மட்டுமே மருத்துவமனைக்கு அழைத்து சென்று கண்காணிக்கப்படுவார்கள். எந்தவித அறிகுறியும் இல்லாதவர்களுக்கு வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டு நோய் எதிர்ப்பு சக்திக்கான கபசுரண குடிநீர், வைட்டமின் மாத்திரைகள், சத்தான உணவுகள் வழங்கி மருத்துவர்களால் ஆலோசனைகள் வழங்கி, கண்காணிப்படுவார்கள். அவர்களுக்கு ஏதாவது அவசர தேவைகள் ஏற்பட்டால் 1077 என்ற கட்டணமில்லாத தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

மேலும் ஒவ்வொரு வட்டார அளவிலும் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டு கண்காணிப்பு பணியில் ஈடுபட உள்ளனர். கொரோனா வைரஸ் தொற்று தொடர்பாக பொதுமக்கள் தவறான தகவல்களை நம்ப வேண்டாம். அச்சம் கொள்ளவும் தேவையில்லை எனவும்,

பொதுமக்கள் சமூக இடைவெளியை பின்பற்றி தன்னைத்தானே தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மாவட்டத்தில் கண்காணிப்பு குழுக்கள் மருத்துவத்துறையினர், காவல்துறையினர், கிராம நிர்வாக அலுவலர், சத்துணவு அமைப்பாளர், அங்கன்வாடி பணியாளர், ஊராட்சி செயலர், உள்ளாட்சி அமைப்புகளை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வெளியிடங்களிலிருந்து வருபவர்கள் தாமாக முன்வந்து கண்காணிப்பு குழுவினரிடம் தகவல் தெரிவிக்க வேண்டும். இவர்கள் தகவல் தெரிவிப்பதன் மூலம் அவர்களும் அவர்களை சார்ந்த குடும்பமும், மேலும், பொதுமக்களுக்கும் நோய் பரவா வண்ணம் காக்கப்படுகிறது. கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையில் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து பொதுமக்களும் பங்காற்றி கொரோனா வைரஸ் தொற்று பரவலை விரைவாக குறைத்து நம் மாவட்டத்தை பச்சை மண்டலமாக மாற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.ஆர்.சீனிவாசன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் பொ.சந்திரசேகர், மாவட்ட வருவாய் அலுவலர் கா.பொற்கொடி, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், அரசு மருத்துவக்கல்லூரி தலைவர் முத்துகிருஷ்ணன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) வீ.சி.ஹேமசந்த்காந்தி, கோட்டாட்சியர் ஜெ.பாலாஜி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி உட்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**